

# The Great Dinner

## மாபெரும் விருந்து

## லூக்கா 14 : 15 24

ஒரு மனிதன் ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் செய்து தன்னுடைய பணக்கார நண்பர்கள் எல்லோரையும் அவனோடு கூட விருந்து சாப்பிட அழைத்தான். அவனுடைய நண்பர்கள் இல்லை எங்களால் கலந்து கொள்ள முடியாது என்று மறுத்தார்கள் என்ன ஒரு அற்புதமான ஒருவிருந்து அந்த விருந்துச் சாலையில் நடக்கப்போகிறது என்பதை அறியாதவர்களாய் அதிலே கலந்து கொள்ளாமல் வேறு அலுவல்கள் தாங்கள் செய்ய வேண்டியது இருக்கிறது என்று விருந்தை அலட்சியப்படுத்தினர். பிறகு அந்த மனிதன் ஏழைகளாயிருந்த வியாதியஸ்தர்களையும், முடவர்களையும், குருடர்களையும், விருந்துக்கு அழைத்தான் அவர்கள் சந்தோஷத்தோடே வந்து சாப்பிட்டார்கள் விரைவில் மேசைகள் எல்லாம் நிறைய ஜனங்களால் நிரம்பினது. அந்த மனிதன் யார் வரவில்லையோ அவர்களுக்காக துக்கமடைந்தார். ஆனால் அவருடைய புதிய நண்பர்களுக்காக சந்தோஷப்பட்டார்.

நாம் எல்லாரும் வந்து எப்போதும் என்றென்றும் அவரோடுகூட பரலோகத்தில் வாழவேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இயேசுவினுடைய விருந்து என்பது பாவ மன்னிப்பும், நித்திய ஜீவனும் ஆகும்.

### ஜெபம்

ஆண்டவரே, தயவுசெய்து, உம்முடைய அழைப்பை நாங்கள் அசட்டை செய்யாமல் ஏற்றுக்கொள்வதற்கும், நீர் எங்களுக்கென்று ஆயத்தப் படுத்தியிருக்கிற நித்திய ஜீவமேசையில் பங்கு பெறுவதற்கும் எங்களை பெலப்படுத்துவதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியானவரை அனுப்பும் ஆமென்.

### வளர்ந்தவர்களுக்குரிய வேதாகம மனப்பாட வசனம்

### வெளிப்படுத்தின சுவிஷேசம் 3 : 20

“இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே கூட போஜனம் பண்ணுவேன், அவனும் என்னுடனே போஜனம் பண்ணுவான்.